www.agaram.lk

34414

OL/2017/43-T-I (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 T I

| வினாப்பத்திரம் | புள்ளிகள் |
|---|---|
| I | |
| II | |
| III | |
| மொத்தம் | |
| பரீட்சகர் 1 | |
| பரீட்சகர் 2 | |
| எண்கணித பரிசோதகர் | |

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017


චිත්‍ර I
சித்திரம் I
Art I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
One hour

✻ எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

சுட்டெண் :.............................

- கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி **1** தொடக்கம் **5** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.



**1.** இக்கட்டடக்கலை அமைப்பு ................................................ யுகத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.

**2.** இது ............................................ என அழைக்கப்படும்.

**3.** இது .............................................. மன்னனின் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது.

**4.** இங்கு தூண்களின் நிர்மாணிப்புக்காக ............................................ வடிவம் மாதிரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**5.** இது .............................................. நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

**6.** தூபியொன்றைச் சுற்றி வட்ட ஒழுங்கமைப்பில் காணப்படும் கற்றூண்களைக் கொண்டு அங்கு எந்தக் கட்டடம் அமைந்திருந்ததாகக் கருதமுடியும் ?

.................................................................................................................................

**7.** பிரபல்யமான காட்டூன் கேலிச்சித்திரப் பாத்திரமான 'அப்புஹாமி' எந்தக் கலைஞரின் நிர்மாணிப்பாகும் ?

.................................................................................................................................

**8.** இஸ்லாமிய கலை நிர்மாணிப்புகளில் எழுத்துக்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் அலங்காரங்கள் எப்பெயரால் அழைக்கப்படும் ?

.................................................................................................................................

**9.** 'இறுதித் தீர்ப்பு' எனும் கதையை ஓவியமாக வடித்த இத்தாலிய ஓவியக் கலைஞர் யார் ?

.................................................................................................................................

**10.** பண்டைய கிரேக்கச் சிலைகளில் காணத்தக்க யதார்த்த பண்புகளை வெளிப்படுத்தும், சிந்துவெளியில் கிடைக்கப்பெற்ற சிலை யாது ?

.................................................................................................................................

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன்கீழ் கோடிடுக.

**11.** கம்பளைக் காலப்பகுதிக்குரிய கடலாதெனிய விகாரை,
(1) திராவிடக் கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையாகும்.
(2) ஆரம்பத்தில் இந்துக் கோயிலாக இருந்து பிற்காலத்தில் விகாரையாக மாற்றப்பட்டதாகும்.
(3) இந்துக்களான திராவிடக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(4) கருங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரையாகும்.

**12.** தர்ம போதனை செய்யும் தன்மையினதாகச் செதுக்கப்பட்ட அநுராதபுர காலத்திற்குரிய புத்தர் சிலை,
(1) சமாதி புத்தர் சிலையாகும். (2) பங்குளிய புத்தர் சிலையாகும்.
(3) தொலுவில புத்தர் சிலையாகும். (4) அவுக்கண புத்தர் சிலையாகும்.

**13.** பொலன்னறுவையில் கிடைக்கப்பெற்ற நடராஜர் சிலையினால்,
(1) நடனமாடும் கடவுளொருவர் சித்திரிக்கப்படுகிறார்.
(2) சிவபெருமானின் பலமும் சக்தியும் சித்திரிக்கப்படுகிறது.
(3) இறைவன் பக்தர்களின் மீது காட்டும் கருணை ஞாபகமூட்டப்படுகிறது.
(4) சிவபெருமானின் தாண்டவ நடனத் தோற்றம் சித்திரிக்கப்படுகிறது.

**14.** 'கடினமான செயல்' எனும் இந்திய காந்தாரச் சிலை,
(1) யதார்த்த தன்மையுடன் வனையப்பெற்ற புத்தர் சிலையாகும்.
(2) புத்த பகவானின் நலிவுற்ற உடலையும் மனவுறுதியையும் சித்திரிப்பதாகும்.
(3) நலிந்த துறவியொருவரைச் செதுக்குவதற்கான கலைத்துவ முயற்சியாகும்.
(4) காந்தார தேசத்தில் செதுக்கப்பட்ட யதார்த்தபூர்வமான புத்தர் சிலைகளுள் சிறப்பானதொரு நிர்மாணிப்பாகும்.

**15.** பிக்காசோவின் 'அவிக்னோனின் யுவதிகள்' என்ற ஓவியத்தினால் வெளிப்படுத்தப்படுவது,
(1) பெண்கள் ஐவரின் வாழ்க்கைத் தகவல்களாகும்.
(2) பாசிலோனா நகரின் அழகிய பெண்கள் பற்றியாகும்.
(3) அழகிய பெண்களுக்கு மத்தியிலுள்ள அருவருப்பான பெண்களாவர்.
(4) விலைமாதர்களின் வெளித் தோற்றமும் அவர்களின் உள்ளார்ந்த அவலநிலையுமாகும்.

● **16** தொடக்கம் **20** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.

**16.** வீராசனம் : ......................................................................................

**17.** மஸ்ஜித் : ......................................................................................

**18.** மேதிய : ......................................................................................

**19.** அரக்கு வேலை : ......................................................................................

**20.** சிறு புடைப்பு : ......................................................................................

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk




- **21** தொடக்கம் **25** வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை, எதிரிலுள்ள **A, B, C, D, E** ஆகிய உருக்களிலிருந்து தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினை **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.


**21.**  (.........)


 **A**

**22.**  (.........)

 **B**

**23.**  (.........)

 **C**

**24.**  (.........)

 **D**

**25.**  (.........)

 **E**

- **26** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்/சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

**26.** நீர்வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தி வரையப்பட்ட 'ஓட்டுச் சூளை' என்ற ஓவியம் .................................... என்ற கலைஞரின் நிர்மாணிப்பாகும்.

**27.** டேவிட் பேண்டர் என்ற கலைஞர் இயேசுவின் குணப்பண்புகளைக் கருப்பொருளாகக் கொண்டு .............................. தேவாலயத்தில் பல ஓவியங்களை வரைந்துள்ளார்.

**28.** அஜந்தா ஓவியங்கள் பிரஸ்கோ சீகோ (டெம்பரா) முறையில் வரையப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றமைக்குக் காரணம், அவை ................................ இன் மீது வரையப்பட்டுள்ளமையாகும்.

**29.** மைரன், பிரக்சிடெலஸ் ஆகியோர் கிரேக்கத்தில் ........................................ யுகத்தில் வாழ்ந்த சமகாலக் கலைஞர்களாவர்.

**30.** மர ஊடகத்தினால் ஆக்கப்பட்ட எம்பக்க தேவாலயம் ................................................... எனும் சிற்பியாலும் அவரது சீடர்களாலும் நிர்மாணிக்கப்பட்டது.


[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk




- **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களுக்கு **F, G, H, I, J** ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.



F



G



H



I



J

**31.** ஏ. மார்க் என்ற கலைஞரின் நிர்மாணிப்பான, **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது ?

.............................................................

**32.** **G** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிவபக்த நாயனார் யார் ?

.............................................................

**33.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலையில் இடம்பெற்றுள்ள இந்தியக் கலைமரபு யாது ?

.............................................................

**34.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிங்கத்தின் உருவமானது எந்த இந்தியக் கலை நிர்மாணிப்புடன் தொடர்புடையது?

.............................................................

**35.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இயற்கைப் பண்புகளைச் சித்திரிக்கும் இச்சிலை எகிப்தின் எந்த ஆட்சிக் காலத்திற்குரியது ?

.............................................................

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ண ஓவியத்தை இனங்கண்டு, அதன் கலைப் பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் **36** தொடக்கம் **40** வரை தரப்பட்டுள்ள உப தலைப்புகளுக்கமைவாக கருத்துள்ள **ஐந்து** வாக்கியங்கள் எழுதுக.

**36.** இடமும் கலைஞரும் : .............................................................

.............................................................

**37.** தொனிப்பொருள் : .............................................................

.............................................................

**38.** கோடுகள், வர்ணங்களின் பயன்பாடு : .............................................................

.............................................................

**39.** ஒழுங்கமைப்பு : .............................................................

.............................................................

**40.** உணர்வு வெளிப்பாடு : .............................................................

.............................................................

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

34428

OL/2017/43/STE-I (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

## චිත්‍ර I /சித்திரம் I / Art I



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

34428

OL/2017/43-T-II (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

චිත්‍ර II
சித்திரம் II
Art II

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

முக்கியம் :

※ உங்கள் **சுட்டெண்ணை** விடைத்தாளின் **மறுபக்கத்தில்** தரப்பட்டுள்ள நிரலில் தெளிவாக எழுதுக.

※ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது உங்கள் வரைதல் உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான வரைதல்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாய் அமையலாம்.

※ நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், கெட்டிச்சாயம் (டெம்பரா), பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு ஊடகத்தையும் பயன்படுத்த முடியும்.

※ எல்லாப் பொருட்களையும் கண்பார்வை மட்டத்திற்குக் கீழே இருக்குமாறு வைக்கும்படி பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறில்லாத சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் வரையத் தொடங்க முன்னர் பரீட்சை மேற்பார்வையாளருக்கு இதனை ஞாபகப்படுத்த பரீட்சார்த்திகளுக்கு அனுமதி உண்டு.

---

**சுயாதீன ரேகைச் சித்திரமும் வர்ணச் சித்திர ஒழுங்கமைப்பும்**

※ உங்களுக்கு முன்னாலுள்ள பொருட் தொகுதியை நன்றாக அவதானித்து,

1. பூர்வாங்க பரும்படிப் படத்தை முதலில் வரைக. இதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பருமட்டத் தாளைப் பயன்படுத்துக.
2. நீங்கள் காணும் விதத்தில் பொருட் தொகுதியை வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்காக வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் பயன்படுத்துக.

※ **இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்குக.**

※ உங்கள் வரைதலை மதிப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதைக் கவனத்திற் கொள்க.

- **சுயாதீன ரேகைக் கற்கை**

  1. பருமட்டத் தாளிலுள்ள பூர்வாங்க பரும்படிப் படத்தில் உரிய ஊடகத்தைக் கையாளும் திறன்

- **வர்ணச் சித்திரம்**

  2. தளத்துக்கு உகந்ததாக பொருட் தொகுதி கலைநுட்பத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல்
  3. அளவிடைகள், தூரநோக்கு, முப்பரிமாண விளைவு பற்றிய விளக்கம்
  4. தரப்பட்டுள்ள பொருட்களின் வெளித்தோற்றப் பண்புகளை எடுத்துக்காட்டல்
  5. வர்ண ஊடகங்களைக் கையாளும் திறன்
  6. பொருத்தமான பின்னணியும் ஒட்டுமொத்த நேர்த்தியும்

**மிக முக்கியம்:**

பொருட்களின் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருட்களின் தொகுதிக்குப் பொருந்தும் வகையில் சீராக மாற்றி வரைவதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு.

※ ※ ※

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

34428

OL/2017/43-T-III (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 T III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

| | | |
|---|---|---|
| චිත්‍ර III<br>சித்திரம் III<br>Art III | | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**கவனிக்க :**

※ நீங்கள் **ஒரு** சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.

※ உங்கள் **சுட்டெண்ணையும்** உரிய **வினா இலக்கத்தையும்** விடைத்தாளின் **மறுபக்கத்தில்** உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.

※ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.

※ வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.

※ வரைவதற்கு வெள்ளைத் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத் தாளும் வழங்கப்படும்.

**அ, ஆ, இ ஆகிய பகுதிகளுள் ஏதேனும் ஒன்றில் இருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவுசெய்க.**

## பகுதி அ - சித்திர ஒழுங்கமைப்பு

1. கடற்கரையில் மீனவர்கள்
2. வீதியோர நடைபாதைக் கடையொன்று
3. அருவியொன்றில் நீராடும் பெண்கள்
4. யானைகள் கூட்டமொன்றைக் காணும் உல்லாசப் பிரயாணிகள்

## பகுதி ஆ - அலங்கார ஆக்கம்

5. சீத்தைத் துணி ஒன்றுக்கான பரவல் அலங்காரமொன்றின் **9 × 9** அங்குல அளவிலானதொரு பகுதியை ஐந்து இதழ்களைக் கொண்டதொரு பூ, இலை ஆகியவற்றைக் கொண்டு நிர்மாணிக்குக. பரவலடையும் விதம் தொடர்பில் கவனம் செலுத்துக.
6. மையத்திலிருந்து விரிவடைந்து செல்லும் எட்டு பக்கங்களைக் கொண்ட குடைச்சீலை ஒன்றை அலங்கரிப்பதற்கான அலங்கார ஆக்கமொன்றை நிர்மாணிக்குக.
7. வட்டவடிவ பித்தளைத் தட்டு ஒன்றைச் செதுக்குவதற்காக மரபுரீதியான அலங்காரங்களைப் பயன்படுத்தி அலங்காரமொன்றை நிர்மாணிக்குக.

## பகுதி இ - கிறபிக் சித்திரம்

8. 'நிலாமுகம்' என்ற பெயரிலான சிறுவர் நூல் ஒன்றுக்கான மேலட்டை ஒன்றைத் திட்டமிடுக.
9. 'டெங்குவை இல்லாதொழிப்போம்' என்ற தலைப்பிலான சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்குக.
10. பாடசாலையின் வருடாந்த சித்திரக் கண்காட்சிக்கான அலங்கார அழைப்பிதலொன்றை நிர்மாணிக்குக.

※※※

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!